செ.வெ.எண்: 04 நாள்: 02.02.2019

நாகப்பட்டினம் மாவட்டம்

**வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்தம் 2019 பணிகள் தொடர்பாக அரசு அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் முனைவர்.எம்.வள்ளலார்,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் இன்று (02.02.2019) நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்தம் 2019 பணிகள் தொடர்பாக, வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் முனைவர்.எம்.வள்ளலார்,இ.ஆ.ப அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்ததாவது:

“தேர்தல் ஆணையத்தின் உத்திரவுப்படி 01.01.2019-ஐ தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்தம் 2019 பணிகள் தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 3வது சுற்றாக கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர் பெயர்கள் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பாக ஆய்வுசெய்யப்பட்டு, அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. 18 வயது நிரம்பிய இளம் வாக்காளர்களை விடுபாடின்றி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பள்ளி மாணவர்களிடையே வாக்களிக்கும் முக்கியத்துவம் குறித்தும், சுதந்திரமாக வாக்களிக்க இளம் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் கேட்டறியப்பட்டு, எந்த வாக்காளரும் வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபடாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், எந்த வாக்காளரும் வாக்காளர் பட்டியலிருந்து விடுபாடின்றி இருத்திடல் வேண்டும் என்பதற்கான மீண்டும் வாக்காளர் பட்டியலை சரிபார்த்து வாக்கு சாவடி நிலைய அலுவலர், கிராம நிர்வாக அலுவலர் கிராம உதவியாளர்களிடமிருந்து சான்று பெறவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் அடிப்படை வசதிகள் உள்ளதா என்று வட்டாட்சியர் வருவாய் ஆய்வர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் ஆய்வு செய்திடல் வேண்டும்” எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.கமல்கிஷோர் இ.ஆ.ப., மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தேன்மொழி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)திரு.பத்ரிநாத், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.இரா.காமராஜ் ,தேர்தல் வட்டாட்சியர் திரு.ராஜகோபால் உட்பட அனைத்து வட்டாட்சியர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**